

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
20 MAR 1914
MADRAS.
1047

உ

கடவுள் துணை.

ராஜபார்ட் G. S. முனுசாமி நாயுடு

V. S. C. மகாதேவய்யர்

கானபோக்கிஷம்

G. பொன்னுசாமி முதலியார்

இவர்களால்

பாடிவரும் வர்ணமெட்டுகளமைந்த

# கோகர்ஜான்.

1047/14

இதை

பல நாடகப் பிரியர்களின்

வேண்டுகோளுக்கிணங்கி

சேலம்-செவ்வாய்ப்பேட்டை,

புத்தக ஷாப்பு

தி. சு. கணபதி பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

சேலம்

ஷண்முகவிலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1914-ஆ பிப்ரவரிமீ 19-உ [அணா 2

6-2MGD1,K
N14
142864

உ

கடவுள் துணை.

# கோகர்ஜான்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 MAR 1914
MADRAS.
1049
1.14

வெண்பா.

நூதனமாய்மெட்டமைத்து நூற்பேன்தமிழதனுல்
ஆதிபகவனருளானைமுகன்—வேதஞ்
சிலம்புந்திருவடியை சென்னிமிசைசூடி
நலஞ்சேர்கோகர்ஜான் நன்கு.

## காணவேணும் என்ற வர்ணமெட்டு.

ஓடிஓடிமோடிசெய்யுந்தேனே—உன்னை
ஒத்தணையுஞ் சித்தசன்யான்தானே—யென்னை
ஒத்துக்கூடடி முத்தந்தாவடி
நித்தங்கணபதி பாட்டைக்கேளடி. (ஓடி)

பாரில்பலநாட்களாகதேடி—அடி
பாவையே உன்னுல் மெலிந்தேன்வாடி—நல்ல
பத்தரைமாற்றுத்ததங்கம்
வைத்தநகைநித்தந்தாரேன் (ஓடி)

அந்திநேரமானதெந்தன் கண்ணே யென்னை
சந்தோஷமாய் வந்தணைவாய் பெண்ணே நா
ஞத்திரங்கொண்டோடிவந்தேன்
சாத்திரம்மையாதே நொந்தேன் (ஓடி)

வீடுடன் மிட்டாயெழுதிதாரேன் கண்ணே
வெருருத்திதன்முகத்தைபாரேன் நல்ல
வேதியருஞ்சாதியரும்
நீதியருந்தானறிய (ஓடி)

பாரெல்லாம் விலைமதிக்கும்பட்டு நான்
பாவையேதினந்தருவேன் கட்டு அடி
பாதகியுன்வேதனைதான்
சோதனைசெய்யாதேகண்ணே.

## கோண்டி சிந்து.

அரசர்கட்கதிபதியே உலகினில்—
அன்னீதம் செய்தவர்கள் துன்கெதியே
மறையதுமுறையிடுதே-இதனை
மன்னனே கேட்டுடல்பதரிடுதே
கீசகன்படும்பாவி த்ரோபதை
ஆசையால் மடிந்தனன் கடுங்கோபி
நாசமடைந்தான்லோபி ராவணன்
பாசங்கொண்டசீதையால் தன்னுவி
வாசவனுடலளிந்தான் அகலிகை
நேசங்கொண்டிடமனத்திடமொழிந்தான்
ஈசன்மனமுமெலிந்தான் அனுசூயை
ஏக்கத்தால்குழந்தையாய் தவழ்ந்துநொந்தான்
கோசிகன் மிகத்துடித்தான் மேனகை
தாசியின்சபலத்தால் தவம் விடுத்தான்
மாசில்லாமதிபிறந்தான் தாராவாய்
பேசிஅணையதினம் கலைகுறைந்தான்
சூரியனும் உடலிழந்தான் பீமனால்
த்ரோபதை எண்ணமென்பதைமறந்தான்
அரியயன்பதிதுரந்தான் அனுசூயை
ஆசைகொண்டிடசேயாய் அழுதுவந்தான்
பாரில்துயரம்கொடுத்தான் பத்மா
சூரன்மோகினியால்தன்னுயிர்விடுத்தான்
வீரன்வாலியுந்துடித்தான் ராமபாணம்
பூரமேவமனமெலிந்துகொடுத்தான்

எத்தனை அரசரிருந்தோர் கர்ப்பிலங்கும்
உத்தமியின் வாதனையால் உயிர்துறந்தோர்
பத்தினால்வருகும்பழியே ஏபாவி
சத்தியானுரைத்ததுவுங்குருமொழியே
பத்தியாய்பரமன்பதத்தை தினமும்
நத்தியே பணிவையாகில் நலங்கொடுத்தே
பித்தசடலத்தைவிடுத்தே சுவர்க்கத்தின்
மத்தியில்போய்சேருவாய்டங்களம்படித்தே
தந்தினத்தோம்தானதனனுதனனு
தந்தினத்தோம் தானதனதானதனனு.

## பூமிமெச்சிடும் என்ற வர்ணமெட்டு.

மின்னல்போலவிங்குலாவுகின்ற உரு நங்கையோ
தெய்வமங்கையோ ரதி தங்கையோ—மலர்
விரிஞ்சனூர்தன்கைத் திரந்தெரிக்கவந்த திங்கையோ

மேகம்போலத்திரண்டுருண்டு நீண்டதென்னநீட்டமோ
மலர்த்தோட்டமோ குழல் ஈட்டமோ—பூவில்
விளைந்துவிழுந்தேனை யளைந்துவாழுமளிக்கூட்டமோ

கன்னல்மாரன்ரவி வர்மா சித்ரமங்கு நாணுதே
மையல்தோணுதே மனம் பேணுதே—இவளைக்
கண்டவுடனன்னமொண்டியோடிநடைக்கோணுதே

நாகமுண்டுமிழ்ந்த இந்துபோனுமுகம்வட்டமே
மலர்மொட்டுமே மணித்திட்டுமே போன்ற
நல்லதனங்கள் ரெண்டும் மெல்லவெந்தன் கையிற்கிட்டுமே

மெத்தமெத்த ஜோக்கு வித்தைகாட்டியேயேமாற்றுறாய்
பதம் சாற்றுறாய் மையல்ஏற்றுறாய்—அந்த
விரதிரருகும்மாரன் சிர்ப்பதங்கள் போற்றுறாய்

## அந்தமிருந்திடும் என்ற மெட்டு.

ஆண். அன்னமே உன்னை அணைய இதுநல்லகாலம்
செய்யாதேஜாலம் வீணலங்கோலம் என்னை
அட்டிசெய்யாமலே கட்டி அணைவாய் சுசீலம்

பெண். மன்னனே என்னை மருக அழைப்பதாகாது
வருகும்தீது இனிதப்பாது எனை
வாதித்தால் வந்திடும்பாதக மூட்டையிப்போது

ஆண். பாதகமென்பதுமாதே வந்தாலும் யான் போகேன்
சோராதுசாகேன் உனை விட்டேகேன் என்
பத்தினிஉந்தனை சித்தினி சோராதாளாகேன்

பெண் உத்தமி சீதையை நத்தியராவணன் கோட்டை
அவனிடநாட்டை ஆஞ்சநேயர் வேட்டை—ஆடி
முற்றிலும் தீயிட்டெரித்தகதை அறிநீட்டை

ஆண் சித்தசன் கொக்கோகம் நித்தம்படித்து நீ சேராய்
மையல்தீராய் ஐயையோ பாராய் உன்
பித்தம் பிடித்ததால் செத்திடுவேன் தயைகூராய்

பெண். சித்தசனை நம்பி செத்தவர் எத்தனைகோடி
பெண்களைத்தேடி அழிந்தாரோடி இந்த
உத்தமிசொல்வதை பத்தியாய்வைமனம் நாடி

ஆண். சேலம் கணபதிசெய்த சிங்காரத்தை பாடி
சேரலாம்ஜோடி இருவர் கூடி உன்
செங்கனிவாயிதழ் சிந்திட ஓர் முத்தந்தாடி

## போகாதே நீ போயே என்னும் மெட்டு.

மங்கையர்கரசி போக நங்கையேசாசி
மாது எந்தன்மேல் வாது இப்பெரும்
தீது செய்திட சூதுவந்தது (மங்)

சென்னை-600 005
147861

சித்தசன்கணையே மேல் தைத்ததுமுனையே
தேடிஉந்தனால் வாடி வந்தனன் ஓடி வந்தேனை
சோடிசேர்ந்திடடி சுகங்கூடி தந்திடடி (மங்)

தேவமங்கையரோ பூலோகநங்கையரோ
தேவியென்னை நீ மேவிவந்திடில் ஆவிஉன்னதென்
சேவல்செய்கிறேன் கூவிவந்தணைவாய் உன்சேவை
தந்தணைவாய் (மங்)

நெஞ்சடைக்குதடி செவிபஞ்சடைக்குதடி
தஞ்சமென்றுனை கெஞ்சும் எந்தனை மிஞ்சிவந்தேனை [வாய்
அஞ்சேலென்று நீ கொஞ்சிதந்திடுவாய் முத்தம் வஞ்சிதந்திடு

பலவளமடைந்த சேலம்·தலமதில் பிறந்த
பசுபதிபதம் அனுதினம் துதி கணபதியவர் தானியற்றிய
பாசுரப்படியே வந்து நீ சேர ஒப்படியே (மங்)

நன்னா நன்னா நன்னா நன்னா நன்னா நன்னா நன்னா நானனா.
நன்னா நன்னா நன்னா நன்னா நன்னா நன்னா நன்னா நானனா.

ஆண் மாதே எந்தன் மீதிலிந்த வாதுசெய்ய லாகுமோ
காதலுந்தன் மீதனை கடக்கச்செய்யப் போகுமோ

பெண் காதல் கொண்ட பாதகா அன்னீதம் செய்யலாகுமா
மாதுநொந்த வாதையுனை தீது செய்யாதேகுமா

ஆண். அஞ்சலென்று கெஞ்சிவந்தேன்கொஞ்சியிதழ் தந்திடாய்
வஞ்சி உன்னை தஞ்சமென்றேன் அஞ்சேலென்றுவந்திடாய்

பெண் மிஞ்சிமோக நெஞ்சில் வைத்து தஞ்சமென்ற பாதகா
கொஞ்சநாளில் பஞ்சுபோலென் செஞ்சொலாலெரிகுவாய்

ஆண் வட்டமிட்ட மார்புகொண்ட அட்டகாசக் காரியே
கட்டி என்னை முத்தமிட்டு தொட்டணைவாய் மீரியே

பெண் மட்டிகெட்ட துட்டனேநீ விட்டிடாய் யென்னாசையை
கட்டி முத்தமிட்டு கொள்ளுநன் காதல் கொண்ட நேசியை

ஆண் பலவ்வாயிலங்கிடு நற்சேலம் வாழ்கணபதி
பாடிடும் பதத்தை நாடி தேடி செய்குவோம் துதி

பெண் உலகினுன்போல் யாருளர் உரைத்திடாய் நீ பாவியே
ஓடியே பரமனை நீ பாடி மீளுநன்னெறியே

## மாதர் வனசிங்காரம்.

### அந்தமிருந்திடும் என்ற வர்ணமெட்டு.

சுந்தரமான தோரிந்தவனத்தின் சிங்காரம்
என்னுவிஸ்தாரம் மதிகதூரம் இதன்
சுற்றிலும்வீசு பரிமளவாசமெனனேரம்

மல்லிகை முல்லை மலர்ந்த ரோஜாவுடன் கோடி
மலர்கள் கூடி அழைக்குதோடி இதோ
மந்திகளாடிடும் சந்தோஷம் பாராய என் சேடி

பாரிஜாதமும் படர்ந்ததாமரை பாராய்
செந்தாழை ஜோராய் சம்பங்கி நேராய் நீ
மத்தியில் பார்த்து மனோரஞ்சிதமென கூராய்

கோதையே சண்பகம் பாதரிப் பூவெண்ண ஜோக்கு
சாமந்தி பாக்கு பலவித தேக்கு இங்கு
கோடை காலத்திலே வந்திடலாம் துயர்போக்கு

சுத்த ஜலமுள்ள எத்தனையோ நல்லவோடை
அருகில் மேடை சுற்றிலும் காடை இதன்
சுந்திரத்தை கண்டால் இந்திரன் செய்குவான் ஜாடை

கூவுங்குயிலுடன் மேவுமயில்களினாட்டம்
கிளிகளின் கூட்டம் மொழிந்திடும் சிரேஷ்ட்டம் என்
கோதையே கண்டினி ஏது மனத்திடை வாட்டம்

சேலம் கணபதி செய்தபதமிதைபாடி
அவரைத்தேடி அழைத்துவாடி உயர்
சேடியே கண்டுபணிந்து போவோம் விளையாடி

## புருஷ வனசிங்காரம்

### (ஆறு நீயுன் பேரைக்கூறுவையே என்ற வர்ணமெட்டு)

அந்தமிருந்த இந்நந்தவனம் பெருமை இதை
தி சேட காவினாலும் ஓதிடலாகுமோ சொல்

அல்லியும் அசோகுபுன்னை அழகுசாமந்தியுடன்
அருமைமலரிங்குள தரிவாயே
மெல்லியர் மிக விரும்பும் சொல்லுதர் கரியமலர்
நல்ல நல்ல தாகவுண்டு நாரிபாகர் பூசைக்கிது அந்

சந்தனம் அகில் விருட்சதம் சாதிமல்லிமுல்லையுடன்
சண்பகம் பன்னீரிதனின் மணஞ்ஜோரு
பந்திபந்தியாக விங்கு மந்திகளும கூட்டங்கூடி
விந்தையாக குதித்த வேடிக்கை அதை நீ பாரு அந்

தாளோ குயில்பாடுவதும் கானமயிலாடுவதும்
மான துகளோடுவதும் வெகுசீறு
வானவர் துதிக்கும்நதி தோணதோபலாக்கதலி
வளம்திகுமிவ்வனத்தினழகை வர்ணிக்கபோமோ (அந்த)

## சந்திராசரஷ குணலோலா என்றவர்ணமெட்டு.

ஆண். கூவுங்குயில்மொழியே வாடி மத
னைவுங்கண்ணையோ சதகோடி. அடி
நாவும் வாருநதிங்குவேவாடி எனை
தாவி அணைந்துசுகந்தாடி (கூவு)

பெண் என்று வார்த்தை சொன்னீரய்யா உமக்
கேர்க்கமொழியிதிது மெய்யா புவி
மன்னர்க்கழகிதல்லதய்யா சுத்த
மடையனுனையான்மலர்கையா (என்)

ஆண் நெஞ்சம்பதைக்குதெந்தன் பெண்ணே என்
னினைவுதடுமாறுதென் கண்ணே நீ
கொஞ்சம் தயவுசெய்திவ் விண்ணே மதன்
கொடுமை பாக்கச்செய்யப்பண்ணே (கூவும்)

பெண்- போதும் போதுன் வாயைமூடு துர்
புத்தியால் வருமவகேடு நீ
சாது சங்கத்தினை நாடு ஆதி
சங்கரன் பதந்தனை பாடு (என்

ஆண். மோடி செய்யாதெந்தன் மாதே நான்
கோடிபவுன் தருவேன் கோதே என்னை
கூடி அணைகுவாயிப்போதே உன்னை
பாடுவேன் தினமும் தப்பாதே (கூவுங்)

பெண் பித்தம் பிடித்ததோடா நாயே என்னை
நத்திவருகாதினி பேயே அதி
உத்தமி என்று நினைப்பாயே நா
னுரைத்திடில் சாம்பலாவாயே

ஆண் பத்தி எரிக்கமண நாட்டு இது (கூவுங்)
பாலன் கணபதியின் பாட்டு என்
னுத்தமியே தினமும் கேட்டு உன்
சித்தமிரங்கு என்னை மீட்டு (கூவுங்)

கண்டாசைக் கொண்டேனே என்ற வர்ணமெட்டு.

மானே உன்னை நான் கண்டு மையலாகினேன்
தேனே திரவியமே தெ கிட்டாதே தெள்ளமுதே
வானோர் தினம் புகழும் வையமிசை யைய்புரண்டி (மானே)
மாரன் கணையதுவென் மார்துளைக்குதே
தீரமனத்துடன் யான் தியங்காதிருந்திடினும்
சோரமதன் வந்தென்னை சோதிக்குறான் பாதைப்பட (மா)
அன்னமது வெனக்கு அருவருக்குதே [ன்
சொன்னேன் சொன்னேனையான் சொகமதுண்டானேன்தா
பின்னஞ் செய்யாமலென்னை கன்னியரே வந்தணைவாய் (மா)
காலமிதுயென்னை நீ கட்டிச்சேரடி
ஜாலஞ்செய்யாதே மானே சைய்யோகஞ்செய்வாய் நீதேனே
சேலம் கணபதிசொல் சிங்காரம் கேள்பாய் நீ தானே (மா)

முற்றிற்று.

விரைவில் இரண்டாம்பாகம் வெளிவரும்.

14784

# விளம்பரம்.

பார்க்கப் பார்க்க —— படித்துப் பர்க்க
கேழ்க்கக் கேழ்க்க —— கீதம் விநோதம்.

இதைக்கண்ணுறும் சகல கனதனவான்களுக்கும் அடியில் கையொப்பமிட்டவனாகிய யான் மிகவும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுவதாவது.

என்னால் சில வருடங்களாக எழுதிவந்திருக்கும் புத்தகங்களை பார்த்தும் படித்துமிருக்கலாம். இப்பொழுது நம் சுதேசநாடகக் கம்பெனிக்காரர்களின் உபயோகத்திற்காக சேலம் மங்களவிநோத சபா உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ நமசிவாயம் பிள்ளை அவர்களின் பிரதம மாணாக்கர்களில் ஒருவராகிய மங்களபுரி கானபொக்கிஷம் ஜி. பொன்னுசாமி முதலியார் அவர்கள் விருப்பத்திற்கிணங்க பார்ஸி, இந்துஸ்தான், டோமரி, தில்லானா, திருப்புகழ், காவடி சிந்து முதலிய பலவித வர்ணமெட்டுகளுடன் என்னால் எழுதப்பட்ட நூதன புத்தகங்களாவன :—

| | | | |
|---|---|---|---|
| புதிய கள்ளன் பாட்டு ... ... ... | 0 | 1 | 0 |
| கோகர்ஜான் ... ... ... ... | 0 | 2 | 0 |
| விரதபூஷணன் சரித்திரம் ... ... ... | 0 | 4 | 0 |
| சாரங்கதாரன் சரித்திரம் ... ... ... | 0 | 4 | 0 |
| சக்களத்தி போராட்டம் ... ... ... | 0 | 2 | 0 |
| சேலம் கோதாவரி ... ... ... | 0 | 2 | 0 |
| நெருமலை வழிநடைச்சிந்து ... ... ... | 0 | 1 | 0 |
| கூளாங்காலன் சிந்து ... ... ... | 0 | 0 | 6 |
| கலியுக மோசம் ... ... ... ... | 0 | 12 | 0 |

இதர நாடக கம்பெனியார் தயார்செய்த புதிய புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| கவாய் மாணிக்கம் ... ... ... | 0 | 2 | 0 |
| பங்கஜலோசனி ... ... ... ... | 0 | 2 | 0 |
| இந்துஸ்தான் பாலாமணி ... ... ... | 0 | 2 | 0 |
| இந்துஸ்தான் ரங்கநாயகி ... ... ... | 0 | 2 | 0 |
| இந்துஸ்தான் ராஜாமணி ... ... ... | 0 | 2 | 0 |
| இந்துஸ்தான் ரங்கசாமி நாயுடு கீதம் ... | 0 | 2 | 0 |
| அண்ணாமலைரெட்டியார் காவடிச்சிந்து ... | 0 | 1 | 0 |
| அல்லி சரித்திரம் ... ... ... ... | 0 | 3 | 0 |
| ஷை இரண்டாவது பாகம் ... ... | 0 | 2 | 0 |
| மோகினிராஜன் சரித்திரம் ... ... ... | 0 | 1 | 0 |

இன்னும் வேண்டிய தினுசுகள் மொத்தத்திலும் சில்லரையிலும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம் :—

தி. சு. கணபதி பிள்ளை,
புக் டிப்போ, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

---

ரூபாய்க்கு குறைந்த ஆர்டர் கொடுப்பவர் பூரா தொகைக்கும் ஸ்டாம்பு அனுப்பித்தாலொழிய புத்தகம் அனுப்பப்படமாட்டாது.